தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

10.09.2013

**நீர்மட்டம் குறைந்ததால் மணிமுத்தாறு அணை மூடல்**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 61 அடியாக குறைந்ததையடுத்து, அந்த அணை திங்கள்கிழமை மூடப்பட்டது.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையிலிருந்து ஜூன் மாதம் 20-ஆம் தேதியும், மணிமுத்தாறு அணையிலிருந்து ஜூலை மாதம் 27-ஆம் தேதியும் தண்ணீர் திறக்கப்பட்டது. கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து ஜூலை 10-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டத்தில் 7 கால்வாய்கள் மூலம் 40,000 ஏக்கர் நிலமும், தூத்துக்குடி மாவட்டத்தில் 4 கால்வாய் மூலம் 46,107 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறுகிறது. கடனாநதி, ராமநதி அணைகள் மூலம் சுமார் 12,000 ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது.

திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100.10 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 99.74 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 61.03 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 60.80 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 60.25 அடியாகவும் இருந்தது. திங்கள்கிழமை காலை நிலவரப்படி பாபநாசம் அணையில் 21 மி.மீ. மழையும், சேர்வலாறு அணையில் 1 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

குறையும் நீர்வரத்து: பாபநாசம் அணைக்கு நொடிக்கு 688.08 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 19 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

கடனாநதி, ராமநதி அணைகளுக்கு நொடிக்கு தலா 5 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையிலிருந்து 1100 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கடனாநதி அணையிலிருந்து 60 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 40 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு மூடல்: மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மூலம் பாசனம் பெறும் 2876 ஏக்கர் நிலங்களுக்கு முன் கார் பருவ சாகுபடிக்காக கடந்த மே மாதம் 5-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்பாசனத்தில் 90 சதவிகிதம் அறுவடை நிறைவடைந்த நிலையில், அணையின் நீர்வரத்து வெகுவாக குறைந்து காணப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 61 அடியாகக் குறைந்ததையடுத்து, அணை திங்கள்கிழமை மூடப்பட்டது.

**இயற்கை வேளாண்மைக் கண்காட்சி**

அரியலூர் அருகே திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவிகள் சார்பில் இயற்கை வேளாண் கண்காட்சி அண்மையில் நடைபெற்றது.

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவிகள் அரியலூர் மாவட்டம், நாகமங்கலத்தில் வேளாண் மற்றும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்த் கண்காட்சியை நடத்தினர் இதில் இயற்கை வேளாண் முறைகளான பஞ்சகவ்யம், நவகவ்யம், ஜீவாமிர்தக் கரைசல், மூலிகை பூச்சிவிரட்டி, மண்புழு வளர்ப்பு, அசோலா வளர்ப்பு பற்றி மாணவிகள் பொதுமக்களுக்கு விளக்கம் அளித்தனர்.

மேலும் புதிய வேளாண் தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடி, நீடித்த நீலையான கரும்புச் சாகுபடி, திருந்திய பயிர் வகை சாகுபடி, நடவு முறை, துவரை சாகுபடி பற்றியும், உயிர் உரங்களின் முக்கியத்துவம், மண் மாதிரி எடுத்தலின் அவசியம் பற்றியும் அவர்கள் விளக்கினர். இதில் அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர், வேளாண் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 109.85 அடி**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 109.85 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 11,835 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 4,001 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 4,000 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 3,004 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,000 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**தருமபுரியில் 60 மி.மீ. மழை**

தருமபுரி மாவட்டத்தில் தருமபுரியில் அதிக அளவாக 60.மி.மீ. மழை பதிவானதாக மாவட்ட நிர்வாகம் திங்கள்கிழமை தெரிவித்தது.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாகத் தொடர்ந்து மழை பெய்தது. பகலில் வெயில் அதிகமாக இருந்தாலும் மாலை முதல் நல்ல மழை பெய்கிறது. இதனால், மாவட்டத்தில் நீர் ஆதாரங்களான ஏரி, அணை, கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்த நிலையில், தருமபுரியில் ஞாயிற்றுக்கிழமை இரவு மழை பெய்தது. சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால், வாகன ஓட்டிகள் சிரமத்துக்கு உள்ளாயினர்.

சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியதால், சாலைகளில் புதிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.

தருமபுரி திங்கள்கிழமை இரவு பெய்த மழையால், கோட்டைப் பகுதியில் வசிக்கும் சபீத் முண்ணாவின் (58) வீட்டின் பக்கவாட்டுச் சுவர் இடிந்து கீழே விழுந்தது. இதில் யாரும் காயமடையவில்லை.

தருமபுரி மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை 8 மணி அளவில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): தருமபுரி - 60, அரூர் - 17.30, மாரண்டஹள்ளி - 10, பென்னாகரம் - 9, பாலக்கோடு - 8.10, ஒகேனக்கல் - 6.40, பாப்பிரெட்டிப்பட்டி 4.

மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 24. சராசரியாக 16.40 மழை பதிவானதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்தது.

தளியில் 80 மி.மீ மழை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு தொடங்கிய மழை விடிய, விடிய பெய்தது.

மாவட்டத்தில் தொடர்ந்து 6-ஆவது நாளாக பெய்து வரும் பலத்த மழையால், கிருஷ்ணகிரி அணை, கெலவரப்பள்ளி அணை மற்றும் ஏரிகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

இந்த மழையால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரம் (மி.மீட்டரில்):

தளி 80, கிருஷ்ணகிரி 48.20, ஒசூர் 31, ஊத்தங்கரை 6, பெனுகொண்டாபுரம் 23.40, போச்சம்பள்ளி 6.20, பாரூர் 12, நெடுங்கல் 10.20, தேன்கனிக்கோட்டை 12, அஞ்செட்டி 13, சூளகிரி 8, ராயக்கோட்டை 23.

**செப். 24-இல் பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்**

பால் கொள்முதல் விலையை உயர்த்திடவும், தீவனங்களை 50 சத மானிய விலையில் அளிக்கவும் வலியுறுத்தி, வருகிற 24-ஆம் தேதி அரசு அலுவலகங்கள் முன் பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், நடத்தப்படும் இந்தப் போராட்டம் குறித்து சங்கத்தின் நாமக்கல் மாவட்டச் செயலர் சி.ரங்கசாமி வெளியிட்ட அறிக்கை:

கடந்த ஒரு ஆண்டுகளில் அனைத்து வகை தீவனங்களின் விலையும் 30 முதல் 50 சதம் வரை உயர்ந்துள்ளது. ஆனால், பால் கொள்முதல் விலை ஒன்னரை ஆண்டுகளாக உயர்த்தப்படவில்லை. இதனால், நடுத்தர, ஏழை விவசாயிகள்

கறவை மாடுகளை அடிமாட்டு விலைக்கு விற்கும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பாதிப்புகளைத் தடுக்கப் பசும் பால் லிட்டருக்கு ரூ.5-ம், எருமைப் பால் லிட்டருக்கு ரூ.7-ம் உயர்த்திட வேண்டும். தவிர, ஆந்திரம், கர்நாடகம், கேரள மாநிலங்களில் பால் உற்பத்தியாளர்களுக்கு மாநில அரசு ஊக்கத்தொகை அளிப்பதுபோல தமிழகத்திலும் பால் உற்பத்தியை ஊக்கப்படுத்த லிட்டருக்கு ரூ.3 ஊக்கத்தொகை வழங்கிட வேண்டும்.

சமீபத்தில் தமிழக அரசு அறிவித்த கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு 25 சத மானியத்தில் ஆவின் தீனம் மற்றும் பசுந்தீவனங்கள் வழங்கும் திட்டம் பெயரளவுக்கே உள்ளது. பெரும்பகுதியினருக்கு இந்தச் சலுகைகள் கிடைக்கவில்லை.

அரசு இந்தப் பிரச்னையில் உடனடியாகத் தலையிட்டு தீவன உற்பத்தியை அதிகப்படுத்தி 50 சதம் மானிய விலையில் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும்.

நலிவுற்று வரும் தொடக்க பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டுக்கு தமிழக அரசு கொள்முதலாகும் பால் லிட்டருக்கு ரூ.1 வீதம் மானியம் வழங்கிட வேண்டும். ஆவின் பால் விற்பனையை அதிகரிக்கும் வகையில் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவில் ஆவின் பாலையும் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க அலுவலகங்கள் மற்றும் அரசு அலுவலகங்கள் முன் 24-ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது.

இதன்படி, நாமக்கல் மாவட்டத்திலும் அன்றைய தினம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், ஆவின் அலுவலகம், முக்கிய அரசு அலுவலகங்கள் முன் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**

காவிரி டெல்டா மாவட்டங்களில் பரவலாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்காக திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

கர்நாடக மாநிலத்தில் தொடர் மழை காரணமாக மேட்டூர் அணைக்கு கூடுதலாக தண்ணீர் வந்ததையடுத்து, அடுத்து, டெல்டா பாசனத்துக்காக கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. அடுத்த சில நாள்களிலேயே அணைக்கு வரும் நீரின் அளவு கணிசமாகக் குறைந்தது. மேலும் நொடிக்கு சுமார் 20 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வந்தாலும், அணையின் நீர்மட்டம் சுமார் 10 அடி வரை குறைந்தது.

இந்த நிலையில், காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த சில நாள்களாகப் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், வயல்களுக்கு தண்ணீர் தேவையில்லை என்பதால், மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு படிப்படியாகக் குறைக்கப்பட்டு வந்தது. அதன்படி, ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 5,553 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வந்தது.

இது திங்கள்கிழமை மேலும் குறைக்கப்பட்டு, நொடிக்கு 4,706 கன அடி நீர் வீதம் வெளியேற்றப்பட்டது. நீர் வெளியேற்றம் குறைந்ததை அடுத்து மேட்டூர் அணையின் நீர்மட்டம் 109.48 அடியில் இருந்து 110.85 கன அடியாக உயர்ந்தது.

**அப்பர் நீராறில் 25 மி.மீ. மழை**

அப்பர் நீராறு அணைப்பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 25 மி.மீ. மழை பெய்தது.

பிற இடங்களில் பெய்த மழை அளவு விவரம் (மி.மீ.ல்): சின்கோனா 1, வால்பாறை பி.ஏ.பி. அலுவலகம் 14, வால்பாறை தாலுகா அலுவலகம் 18.

**தொடர் சாரல் மழை: துளிர்விடும் நிலக்கடலைச் செடி**

புன்செய் புளியம்பட்டி வட்டாரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளதால், மானாவாரி பயிராக பயிரிடப்பட்டுள்ள நிலக்கடலை பயிர் மீண்டும் துளிர்விட ஆரம்பித்துள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பு.புளியம்பட்டி சுற்று வட்டாரப் பகுதிகளான காராப்பாடி, காவிலிபாளையம், நொச்சிக்குட்டை, மாதம்பாளையம், நல்லூர், புங்கம்பள்ளி, பனையம்பள்ளி,

தேசிபாளையம் உள்ளிட்ட கிராமங்களில் ஆடி மாதத் துவக்கத்தில் பெய்த மழையில் நிலங்களை உழுது, நிலக்கடலை விதைப்பு செய்தனர்.

நிலக்கடலை மூன்று மாத கால பயிர். மண்ணில் உள்ள ஈரப்பதத்தின் மூலமாக செடிகள் முளைத்து களை வெட்டும் தருணத்தில் மழை பெய்யாததால் கடலைச் செடிகள் காய்ந்து கருகின. நிலக்கடலையுடன் ஊடுபயிராக ஆமணக்கும் பயிரிடப்பட்டது. வானம் பார்த்த பூமி என்பதால் மழையை நம்பியே விவசாயம் உள்ளது.

ஏக்கருக்கு ரூ.10,000 வரை செலவு செய்த விவசாயிகள், மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் சில தினங்களாக பெய்த தொடர் சாரல் மழையால் நிலக்கடலைச் செடிகள் மீண்டும் துளிர்விட துவங்கின. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 80.82 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 80.82 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,325 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 800 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 16.12 டி.எம்.சி.

**"ஆன்-லைன் வர்த்தகத்தில் இருந்து மஞ்சளை நீக்க வேண்டும்'**

ஆன்-லைன் வர்த்தகத்தில் இருந்து மஞ்சளை நீக்க வேண்டும் என்று, ஈரோடு எம்.பி. அ.கணேசமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து ஈரோட்டில் செய்தியாளர்களுக்கு திங்கள்கிழமை அவர் அளித்த பேட்டி: இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்க நிர்வாகிகள், தெலுங்கு தேசம் கட்சி எம்.பி.க்கள் உள்ளிட்டோர் கொண்ட குழுவினர் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் அண்மையில் மனு அளித்தோம். அதில் ஆன்-லைன் வர்த்தகத்தில் நடைபெறும் முறைகேடுகள் குறித்து சிபிஐ விசாரணை நடத்த வேண்டும்.

மஞ்சள் விலையில் ஏற்ற, இறக்கம் இல்லாமல் இருப்பதற்கு ஆன்-லைன் வர்த்தக முறைகேடுகள் தான் காரணம். எனவே, ஆன்-லைன் வர்த்தகத்தில் இருந்து மஞ்சளை நீக்க வேண்டும். மஞ்சள் வளர்ச்சி வாரியம் அமைக்க வேண்டும்.

அக்ரி கமாடிட்டியில் மஞ்சளை விவசாயிகள் விற்பதும் இல்லை; நுகர்வோர் வாங்குவதும் இல்லை. மஞ்சளை இருப்பு வைக்காதவர்கள், விற்காதவர்கள், மஞ்சளை பயன்படுத்தாதவர்கள் ஆன்-லைனில் மஞ்சளை வாங்குகின்றனர்.

நடப்புச் சந்தையில் மஞ்சள் விற்பனை விலையைவிட, கமாடிட்டி முன்பேர வர்த்தகத்தில் விற்கப்படும் மஞ்சளின் விலை 20 முதல் 25 மடங்கு வரை குறைவாக உள்ளது.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்தியுள்ளோம். அதேபோல மத்திய அரசின் சந்தை முதலீடு திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார் என்றார்.

பேட்டியின்போது, அகில இந்திய மஞ்சள் விவசாயிகள் சங்கத் தலைவர் பி.கெ.தெய்வசிகாமணி மற்றும் மஞ்சள் விவசாயிகள் சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**பருவ மழை இல்லாததால் கொடைக்கானலில் உருளைக் கிழங்கு விளைச்சல் பாதிப்பு**

கொடைக்கானலில் பருவ மழை பொய்த்ததால் உருளைக்கிழங்கு விவசாயம் பாதிப்பு அடைந்ததுள்ளது.

கொடைக்கானலில் பொதுவாக ஜூன் மாதம் முதல் ஆகஸ்ட மாதம் வரை பருவ மழைக் காலமாகும். ஆனால் கடந்த பல மாதங்களாக மழை இல்லாமல் இருந்ததால்  விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்நிலையில் செண்பகனூர், அட்டக்கடி, வில்பட்டி, இருதையபுரம், பூம்பாறை, பிரகாசபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உருளைக் கிழங்கு சாகுபடி செய்யப்பட்டிருந்தது.

மழை இல்லாத காரணத்தால் விளைச்சல் இல்லாமல் இருந்தது. இதனால் உருளைக் கிழங்கு விவசாயம் சாகுபடி செய்த விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது,

கொடைக்கானலில் பருவ மழை இல்லாத காரணத்தால் விவசாயப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. உருளைக் கிழங்கு 120 நாள்களில் வளரும். 50 கிலோ சிப்பம், ரூ. 950 முதல் ரூ. 1200 வரை விலைபோகும். ஆனால் தேவைப்படும் நேரத்தில் மழை இல்லாத காரணத்தால் விளைச்சல் வெகுவாகக் குறைந்துள்ளது. கொடைக்கானல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தற்போது உருளைக் கிழங்கு எடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால் கடந்த பல நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால், இப் பணிகள் பாதிக்கப்பட்டு வருகிறது.

**காற்றழுத்த தாழ்வு நிலை அதே இடத்தில் நீடிப்பு: வட தமிழகம், புதுவையில் கனமழைக்கு வாய்ப்பு**

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது. இதனால் செவ்வாய்க்கிழமை வட தமிழகம் மற்றும் புதுவையில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: மேற்கு மத்திய வங்கக் கடல் பகுதியில் ஆந்திர கடற்கரையை ஒட்டிய கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவானது. அந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி அதே இடத்தில் நீடிக்கிறது.

வளி மண்டலத்தின் மேல் அடுக்கில் ஏற்பட்ட சுழற்சி காரணமாக வட தமிழகம் மற்றும் புதுவையின் பல பகுதிகளில் செவ்வாய்க்கிழமை கனமழை பெய்யும். மேலும் தென்தமிழகத்தின் சில பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் திங்கள்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வேம்பாவூரில் 120 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மற்றப் பகுதிகளில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): இலுப்பூர் 90, தளி, ஊத்தங்கரை - 80, கீரனூர், காஞ்சிபுரம் - 70, தருமபுரி - 60, கந்தர்வக்கோட்டை, சிவகாசி, கிருஷ்ணகிரி - 50, பெரம்பலூர், அதிராமபட்டினம், ஆலங்குடி, ஸ்ரீபெரும்புதூர், சோழவரம், திருமயம் - 40, நாகப்பட்டினம், ஒசூர், ஏற்காடு, செம்பரம்பாக்கம், குடியாத்தம், உசிலம்பட்டி, விராலிமலை, ஓமலூர், பொன்னேரி, அருப்புக்கோட்டை, நடுவட்டம் - 30, தருமபுரி, மதுராந்தகம், தேவலா, வால்பாறை, ராயக்கோட்டை, திருச்சி, வல்லம், கூடலூர், சின்னக்கல்லாறு, புதுக்கோட்டை, காவேரிப்பாக்கம், வேலூர், அரூர், செங்குன்றம், ஆலங்காயம், சென்னை விமான நிலையம், ஊட்டி - 20, பாபநாசம், பள்ளிப்பட்டு, திண்டுக்கல், கோத்தகிரி, ஒரத்தநாடு, தேன்கனிக்கோட்டை, திருப்பத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், கமுதி, மகாபலிபுரம், கொடைகானல், கல்லணை, குன்னூர், ஆம்பூர், சத்தியமங்கலம், தஞ்சாவூர், கோபிசெட்டிபாளையம் - 10.

**கிராமத்தில் வேளாண் பயிற்சி பெறும் மாணவிகள்**

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் துறை இறுதியாண்டு மாணவிகள் சிதம்பரம் அருகே உள்ள கடவாச்சேரி கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர்.

இதன் தொடக்க விழா அங்குள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. ஒன்றிய கவுன்சிலர் ரா.மாமல்லன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் எஸ்.மோகன்ராஜ் முன்னிலை வகித்தார்.

பின்னர் விவசாயிகளுடன் மாணவிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. வேளாண் தொடர்பான கண்காட்சியை மாணவிகள் நடத்தினர். இதை திரளான விவசாயிகள் பார்வையிட்டு மாணவிகளிடம் வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து கேட்டறிந்தனர்.

**மதுராந்தகத்தில் 70 மி.மீ. மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் திங்கள்கிழமை காலை நிலவரப்படி மதுராந்தகத்தில் அதிகபட்சமாக 70 மி.மீ. மழை பதிவானது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 1 வாரமாக கோடை வெயில்போல் மக்களை வெயில் வாட்டி எடுத்தது. இந்நிலையில் மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை காலை முதலே வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

அவ்வபோது வெயில் காய்ந்தது. இதனால் இதமான சூழ்நிலை நிலவியது.

இருந்தபோதிலும் ஞாயிற்றுக்கிழமை இரவு 9 மணி வரை மழை பெய்வதற்கான எந்தவித அறிகுறிகளும் தெரியவில்லை.

இரவு 9.30 மணிக்கு மேல் குளிர்ந்த காற்று வீசியது. அதைத் தொடர்ந்து சற்று நேரத்தில் பலத்த மழை பெய்யத் தொடங்கியது. இதனால் தாழ்வானப் பகுதிகளில் மழைநீர் வெள்ளமென ஓடியது.

இதேபோல் மாவட்டத்தில் மதுராந்தகம், ஸ்ரீபெரும்புதூர் உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்தது.

திங்கள்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம்:

மதுராந்தகம் 70, காஞ்சிபுரம் 66, ஆலந்தூர் 66, ஸ்ரீபெரும்புதூர் 36, கேளம்பாக்கம் 24, திருக்கழுகுன்றம் 10.

திங்கள்கிழமையும் பகலில் வானம் மேகமூட்டத்துடனே இருந்தது. இதனால் விநாயகர் சதுர்த்தி பூஜை பொருள்கள் வாங்க வந்த பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற விலையில்லா ஆடு, மாடுகளுக்கான இரண்டு நாள் சிறப்பு மருத்துவ முகாமில், 18,567 கால்நடைகளுக்கு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசு அரசு சார்பில் வழங்கப்பட்ட விலையில்லா ஆடு, மாடுகளுக்கு காஞ்சிபுரம் கோட்டம், கால்நடை உதவி மருத்துவமனைகளில், கடந்த ஆகஸ்ட் 30 மற்றும் 31-ம் தேதிகளில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில்,

1,537 கறவை மாடுகள், 1,620 இளம் கன்றுகள், 15,410 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் உள்ளிட்ட சிறப்பு மருத்துவம் செய்யப்பட்டது. இவற்றில், 56 கறவை மாடுகளுக்கு சினை பரிசோதனையும் செய்யப்பட்டது.

**விவசாயிகளின் அடையாள அட்டை வழங்கும் முறையை மாற்ற வேண்டும்**

விவசாயிகளின் அடையாள அட்டை மற்றும் மானியம் வழங்கும் முறையை மாற்ற வேண்டும் என விவசாயிகள் விழிப்புணர்வு சங்கத் தலைவர் பெரியநொளம்பை சி.சந்திரசேகரன் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் இது குறித்து அவர் கூறியது:

வருவாய்த் துறையில் உள்ள கிராமங்களின் பட்டா வரிசைப்படி பட்டாவில் உள்ள நபர்களுக்கு மட்டும் ஒரு அடையாள அட்டை வழங்க வேண்டும். கூட்டுப் பட்டாவில் இருந்தால் கூடுதல் அடையாள அட்டை வழங்குவதில் தவறில்லை. ஆனால் கிராம அதிகாரிகளின் சான்றிதழ்களை வைத்துப் பதிவு செய்வதன்மூலம் ஒரு சிட்டாவைக் கொண்டே பலர் பதிவு செய்துகொள்கின்றனர். இதன்மூலம் போலி அடையாள அட்டைகள்தான் உருவாகும்.

விவசாய விளைப் பொருள்களின் விலை அடிக்கடி மாறிட காரணம் இந்தப் போலி அடையாள அட்டைகள். தமிழக அரசு இதைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் விவசாயிகளின் மானியத் திட்டங்கள் குறித்து அரசு அதிகாரிகளுக்கு முழுமையாகத் தெரிவதில்லை. விவசாயிகள் தங்கள் விவசாய வேலைகளுக்கு மானியம் பெற சுமார் 20 துறைகளை அணுக வேண்டியுள்ளது. இதை 4 துறைகளாக குறைத்து விவசாயிகளின் சிரமங்களைக் குறைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் தமிழக அரசின் மானியங்கள் குறித்து இணைய தளத்தில் வெளியிட வேண்டும் என்றார்.

**விவசாயிகளுக்கான பயிற்சி முகாம்**

புதுச்சேரி ராஜிவ் காந்தி கால்நடை மருத்துவம் மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், சிறுதொழில் விவசாயிகளுக்கானப் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

முயல் வளர்ப்பு, கறவை மாடு பராமரிப்பு - மேலாண்மை என்ற தலைப்பில் நடைபெற்ற முகாமில், 60-க்கும் மேற்பட்ட பெண் விவசாயிகள் பயிற்சி பெற்றனர். இதில் கறவை மாடு பராமரிப்பு, முயல் வளர்ப்பு குறித்த பயிற்சி ஏடு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு கல்லூரித் தலைவர் எஸ்.வேல்முருகன் தலைமை வகித்தார். நபார்டு வங்கி துணைப் பொதுமேலாளர் ஸ்ரீபதி சிறப்புத் திட்டங்கள் குறித்து பேசினார். கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் பத்மநாபன் விவசாயிகளுக்கு அரசு வழங்கும் மானியங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

கல்லூரி முதல்வர் சு.திலகர் பயிற்சியின் நோக்கம் குறித்துப் பேசினார்.

**நீர்மட்டம் குறைவால் மணிமுத்தாறு அணை மூடல்**



மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 61 அடியாக குறைந்ததையடுத்து, அந்த அணை திங்கள்கிழமை மூடப்பட்டது.

தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு, பாபநாசம் அணையிலிருந்து ஜூன் 20-ஆம் தேதியும், மணிமுத்தாறு அணையிலிருந்து ஜூலை 27-ஆம் தேதியும் மற்றும் கடனாநதி, ராமநதி அணைகளிலிருந்து ஜூலை 10-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

திங்கள்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100.10 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 99.74 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 61.03 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 60.80 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 60.25 அடியாகவும்

இருந்தது. பாபநாசம் அணைக்கு நொடிக்கு 688.08 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 19 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

மணிமுத்தாறு மூடல்: மணிமுத்தாறு அணையில் பெருங்கால் மூலம் பாசனம் பெறும் 2,876 ஏக்கர் நிலங்களுக்கு, முன் கார் பருவ சாகுபடிக்காக கடந்த மே மாதம் 5-ஆம் தேதி தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இப்பாசனத்தில் 90 சதவிகிதம் அறுவடை நிறைவடைந்த நிலையில், அணையின் நீர்வரத்து வெகுவாக குறைந்து 61 அடியாகக் இருந்தது. இதையடுத்து அணை திங்கள்கிழமை மூடப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.09.2013**

## கர்நாடகா அரிசி வரத்தால் விலை குறைகிறது :ஸ்டீம் அரிசிக்கு கடும் "கிராக்கி'

கடலூர்:கர்நாடகா மாநில அரிசி வருகை அதிகரிப்பால், தமிழகத்தில் உயர்ந்து வந்த அரிசி விலை குறைந்து வருகிறது.தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் காவிரி டெல்டா பகுதியில் அபரிமிதமான விளைச்சல் தரும் சம்பா போகம் கடும் பாதிப்பிற்குள்ளானது. நிலத்தடி நீர் உள்ள தாலுகாக்களில் மட்டும் நெல் விளைச்சல் இருந்தது. இதனால் நெல் விலை கடுமையாக உயர்ந்தது.மார்க்கெட்டில் உயர்ந்து வரும் அரிசி விலையக் குறைக்க, தமிழக அரசு மலிவு விலை அரிசியை கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை செய்தது. நுகர்பொருள் வாணிபக் கடைகள் மட்டுமல்லாமல் கூட்டுறவு அங்காடிகள் மூலம் அரிசி விற்பனை செய்யப்பட்டது.மலிவு விலை அரிசிஆனால், தரமில்லாத அரிசி விற்கப்பட்டதால் மக்கள் மத்தியில் வரவேற்பில்லாமல் போனது. இதனால் மலிவு விலை அரிசி விற்பனை படிப்படியாக மந்தமானது. தற்போது சி.ஆர்.1009 என்ற இட்லி அரிசி மட்டும் விற்பனையாகிறது. அதுவும் மாவட்டம் முழுவதும் 500 கிலோ மட்டுமே விற்பனையாகிறது. இதனால் வெளி மார்க்கெட்டில் அரிசி விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருந்தது.கர்நாடகா அரிசி வரத்துஇந்நிலையில், தற்போது கர்நாடகா, ஆந்திர மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு அரிசி வரத்து அதிகரித்துள்ளது. இதன் விளைவாக தமிழகத்தில் அரிசி விலை கணிசமாக குறைந்துள்ளது. ஏற்கனவே விற்பனையான பி.பி.டி., அரிசி கிலோ 44 ரூபாயில் இருந்து 32 ரூபாயாக குறைந்துள்ளது. டீலக்ஸ் கிலோ 38லிருந்து 30 ரூபாயாகவும், ஐ.ஆர்.50 ரகம் 30 ரூபாயிலிருந்து 25 ரூபாயாக குறைந்துள்ளது. கர்நாடகா அரிசியில் இரு வேறு அரிசி ரகங்கள் கலந்து பாக்கெட்டில் அடைத்து விற்பனை

செய்யப்படுகிறது. வெளி மாநில அரிசி என்பதால் அதற்கு "சோனா' என பெயரிட்டு விலை குறைத்து விற்பனை செய்யப்படுவதாக அரிசி வியாபாரிகள் தெரிவித்தனர்.ஸ்டீம் பாயில் அரிசிவெளி மாநில அரிசி விலை குறைந்திருந்த போதிலும், உள்ளூர் அரிசி விலையில் பெரிய அளவிலான மாற்றம் இல்லை. காரணம், புதிய நெல்லில் இருந்து தயாரிக்கப்படும் அரிசியே இந்த விலை குறைவுக்கு காரணமாக சொல்லப்படுகிறது. கர்நாடகாவில் நெல்லை ஊற வைத்து அவியல் போட்டு உருவாக்கப்படும் அரிசி தரமாக இருப்பதோடு, நீண்ட நேரம் கெடாமல் இருக்கும் தன்மை கொண்டது.ஆனால், அதிக நேரம் வேக வைக்க வேண்டியுள்ளதால் இல்லத்தரசிகள் இதுபோன்ற அரிசியை விரும்புவதில்லை. நெல்லை ஊறல் போடாமலேயே நீராவியைக் கொண்டு வேகவைத்து அரைக்கப்படும் அரிசியில், குறைந்த நேரத்தில் சாதம் சமைக்க முடிகிறது என்பதால் ஸ்டீம் அரிசியை விரும்பி வாங்கும் நிலை உள்ளது. இதனால் உள்ளூரில் தயாரிக்கப்படும் அரிசி கிலோ ஒன்று 3 ரூபாய் அளவிற்கு குறைந்துள்ளது. குறுவை அறுவை துவங்கினால் மேலும் குறைய வாய்ப்பு உள்ளது.

### வேளாண்துறை அறிவிப்பு தென்னையில் அதிக விளைச்சல் பெறுவது எப்படி?

உடுமலை:தென்னையில், அதிக விளைச்சல் பெற இயற்கை வழி வேளாண்மை முறையில், உயிர் உரங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும் என வேளாண்துறை தெரிவித்துள்ளது. உடுமலை வட்டாரத்தில், 14,500 எக்டரில், தென்னை பிரதான சாகுபடியாக உள்ளது. அதிக தேங்காய் விளைச்சல் பெற விவசாயிகள் தென்னை மரங்களுக்கு, ரசாயன உரங்களையும், பூச்சி மற்றும் பூஞ்சாண கொல்லி, களைக்கொல்லிகளையும் பயன்படுத்தி வருகின்றனர். இவ்வகை பூச்சி மருந்து களில், எஞ்சியுள்ள நஞ்சுத்தன்மை, தேங்காய்களிலும், இளநீரிலும் உள்ளது என சமீபத்திய ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. வட்டார வேளாண் உதவி இயக்குனர் மகாலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை: நாட்டில், உணவு உற்பத்தி தன்னிறைவு பெற்றிருந்தாலும், ரசாயன உரங்கள், பூஞ்சாணம்

மற்றும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை உபயோகித்ததால், மண்வளம், நீர் வளம் மற்றும் காற்று மண்டலம் மாசுபட்டு, மனிதன், கால்நடைகள், பறவைகள் மற்றும் இதர உயிரினங்கள் உடல் நலம் பாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இத்தருணத்தில், இயற்கை வேளாண்மையே சிறந்த மாற்றுவழியாக உருவெடுத்துள்ளது. இம்முறை மண்ணின் வளத்தை காத்து, சுற்றுச்சூழலின் தூய்மை சமநிலையினை நிலைப்படுத்துகிறது. நஞ்சில்லாத உணவு என்ற அடிப்படையில், தென்னை சாகுபடியில், இயற்கை வேளாண் முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். மக்கிய தொழு உரம், கம்போஸ்டு, மண்புழு உரம், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்களை பரிந்துரைப்படி இடவேண்டும். தென்னை மரங்களுக்கு தழைச்சத்தினை, அளித்த அஸோஸ்பைரில்லம் உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு, 200 கிராம் என்ற அளவில், மக்கிய தொழு உரத்துடன், கலந்து இடுவதால், அதிலுள்ள பாக்டீரியாக்கள் காற்று மண்டலத்திலுள்ள தழைச்சத்தினை(நைட்ரஜன்) கிரகித்து, மண்ணில் நிலைநிறுத்தி, பயிரின் வேர்களுக்கு, அளிக்கிறது. இதனால், பயிர் செழித்து, வளர்ந்து அதிக காய்ப்புத்திறனை பெறுகிறது. இதே போன்று, பாஸ்போபேக்டீரியா உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு, 200 கிராம் என்ற அளவில், மக்கிய தொழு உரத்துடன் கலந்து விடுவதால், மண்ணிலுள்ள கரையாத மணிச்சத்தினை அங்கக அமிலங்கள் மூலமாக கரைத்து, பயிருக்கு கிடைக்கும் நிலைக்கு மாற்றித்தருகிறது. போதிய மணிச்சத்து கிடைப்பதால், தேங்காயின் அளவு, கொப்பரையின் அளவு அதிகரித்து, அதிக விளைச்சல் கிடைக்கிறது. இத்தகைய உயிர் உரங்கள் மானிய விலையில், உடுமலை, குறிச்சிக்கோட்டை வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு அறிக்கையில், கூறப்பட்டுள்ளது.

## ஆடுதுறை-39 ரக விதை நெல் தயார் குறிஞ்சிப்பாடி வேளாண் அலுவலர் தகவல்

கடலூர்:குள்ளஞ்சாவடி மற்றும் குறிஞ்சிப்பாடி வேளாண் விரிவாக்க மையங்களில் ஆடுதுறை 39, சான்று பெற்ற விதைகள் வழங்கப்படுகிறது. இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் அப்பன்ராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் தரமான நெல் சான்று விதைகள் வழங்கப்பட்டு வருகிறது. கிலோவிற்கு 5 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. குறிஞ்சிப்பாடி மற்றும் குள்ளஞ்சாவடி வேளாண் விரிவாக்க மையங்களில் இதுவரை மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி , பி.பி.டி., 5 ஆடுதுறை ரகத்தில் சான்று பெற்ற விதைகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட விதைகள், விதைப் பண்ணைகளிலிருந்து கொள்முதல் செய்து, சுத்திகரித்து, முளைப்புத்திறனை பரிசோதித்து, விதைச்சான்று துறையின் சான்றட்டை இணைத்த பிறகே வேளாண் விரிவாக்க மையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இந்த விதைகள் குறைந்தபட்சம் 80 சதவீதம் தூய்மை கொண்டவையாகும். இதுவரை விதைப்பு செய்யப்பட்ட வெள்ளைப்பொன்னி, சம்பா மசூரி, ஆடுதுறை 39, ரகத்தின் நாற்றங்கால்களில் பயிர்கள் நல்ல நிலையில் உள்ளன.

தற்போது குள்ளஞ்சாவடி மற்றும் குறிஞ்சிப்பாடி வேளாண் விரிவாக்க மையங்களில் ஆடுதுறை 39, சான்று பெற்ற விதைகள் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் விதைகளை மானிய விலையில் பெற்று பயனடையலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## மண் வளம் குறித்து அறிய விவசாயிகள்...காத்திருப்பு!இணையதளத்தில் அறிமுக-மாகிறது வசதி

ஆர்.கே.பேட்டை:கிராமவாரியான மண் பரிசோதனை விவரங்களை, இருந்த இடத்தில் இருந்தே அறிந்து கொள்ள, புதிய வசதி அறிமுகம் செய்யப்பட உள்ளது. இந்த பணிகள் சற்று தாமதமாக நடந்து வருவதால், திருவள்ளூர் மாவட்டத்தில் மண் பரிசோதனைக்கு விண்ணப்பித்த, 2.50 லட்சம் விவசாயிகள், பரிசோதனை முடிவு தெரியாமல் காத்திருக்கின்றனர்.தமிழக அரசின் வேளாண் துறை சார்பில்,

'அக்ரிஸ்நெட்' (tணச்ஞ்ணூடிண்ணனுt.tண.ஞ்ணிதி.டிண) என்ற இணைய தளம் செயல்பட்டு

வருகிறது. 2.50 லட்சம் பேர் இதில், மழை பொழிவு, விதை மற்றும் உரம் இருப்பு, விலை நிலவரம், அரசு திட்டங்கள் உள்ளிட்ட விவசாயம் சார்ந்த தகவல்கள் வெளி-யிடப் படுகின்றன. இந்த தகவல்களோடு, மண் பரிசோதனை விவரங்களையும் வெளியிடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.தற்போது, வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் மண் பரிசோதனை நடக்கிறது. மண் பரிசோத-னைக்கு விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு, அவர்களது நிலத்தின் தன்மை குறித்த தகவல் ஒரு அட்டையில் வழங்கப்படுகிறது. பரிசோதனை முடிவிற்கு ஏற்ப பயிர் பரிந்துரையும் வழங்கப்படுகிறது.வேளாண் துறை மேற்கொண்டு உள்ள புதிய முயற்சியில், தமிழகம் முழுவதும், விவசாய நிலங்களில், இதுவரை நடத்தப்பட்ட மண் பரிசோதனைகளின் தகவல்களையும், அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட பரிந்துரைகளையும் இணையதளத்தில் பதிவேற்றும் வேலை தற்போது நடந்து வரு-கிறது. திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும், மண் பரிசோதனைக்கு விண்ணப்பித்த 2.50 லட்சம் விவசாயிகளின் தகவல்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகின்றன. இவர்களுக்கு வழக்கமான முறையில், இன்னும் பரிசோதனை முடிவு கொடுக்கப்ப-டவில்லை என்பதால், இணையதளத்தில் வெளியாக உள்ள விவரங்களுக்காக காத்துக் கொண்டு இருக்கின்றனர்.இந்த பணி முடிந்தவுடன், 'அக்ரிஸ்நெட்' இணையதளத்தில், ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாய நிலங்களின் மண்ணின் தன்மையை எளிதில் அறிந்து கொள்ளலாம். மாவட்டம், வட்டம், கிராமம், விவசாயியின் அடையாள எண் உள்ளிட்டவற்றை இணையதளத்தில் கொடுத்தால்; விவசாயி குறித்த தகவல், மண் பரிசோதனை மாதிரி அடையாள எண், பரிசோதனை முடிவு, பயிர் பரிந்துரை உள்ளிட்ட தகவல்கள் பெறலாம். அதே போல், விவசாயிகள், புதிதாக நிலம் வாங்கினால், தங்களின் நிரந்தர அடையாள எண்ணை பயன்படுத்தி நிலம் குறித்த தகவல்களை பெறலாம். எப்போது முடியும்?இது குறித்து, பெயர் வெளியிட விரும்பாத வேளாண் துறை அதிகாரி

ஒருவர் கூறுகையில், ''இணையதளத்தில் பதிவேற்றும் பணிகள் நடந்து வருகின்-றன. இந்த பணிகள் முற்றிலும் நிறைவடைந்த பிறகு தான், பார்வையாளர்களின் வசதிக்கு கிடைக்கும். அதுவரை, 'தளம் மேம்படுத்தப்பட்டு வருகிறது' என்ற தகவல் தான் கிடைக்கும்," என்றார்.இந்த பணிகள் சற்று மெதுவாக நடந்து வருவதால், இணையதளத்தில் தகவல்களை எளிமையாக பெறும் வசதி கிடைக்க இன்னும் மூன்று மாதங்களாகும் என, தெரிகிறது.

## தியாகதுருகம் பகுதியில் மக்காசோள மகசூல் பாதிப்பு : மழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம்

தியாகதுருகம்:தியாகதுருகம் பகுதியில் மழையின்றி போனதால் மக்காச்சோளம் மகசூல் பாதிக்கப்பட்டு, எதிர்பார்த்த லாபம் கிடைக்காமல் விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். தியாகதுருகம் பகுதியில் கடந்த 5 ஆண்டுகளாக மக்காச்சோளம் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இறவை மற்றும் மானாவாரியில் மக்காச்சோளம் சாகுபடி செய்ப்படுகிறது. மாவு, சோளப்பொறி, கால்நடை மற்றும் கோழி தீவன உற்பத்திக்கு அதிகளவு மக்காச்சோளம் பயன்படுகிறது. இதனால் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்குவதால் நல்ல விலை கிடைத்து வருகிறது.பராமரிப்பு செலவு குறைவாக உள்ளதால், இதனை விவசாயிகள் அதிகளவில் சாகுபடி செய்கின்றனர். கடந்த ஏப்., மாதம் இறவையில் 500 ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டது. எதிர்பார்த்த அளவு மழை பெய்யாததால் கிணற்றில் நீர்மட்டம் குறைந்து தண்ணீர் பாய்ச்ச முடியாமல் போனது. வெயிலும் வெளுத்து வாங்கியதால், பயிர்கள் ஊட்டமாக வளரமுடியாமல் போனது.இதனால் பெரும்பாலான கதிர்களில் மக்காச்சோள மணிகள் உருவாகாமல் போனது. வழக்கமாக கிடைக்கும் மகசூலை விட கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழை துவங்கிய பின்பும் மழை தொடர்ந்து ஏமாற்றியதால் நீர்மட்டம் உயர வழியின்றி போனது.தண்ணீர் பற்றாக்குறை பிரச்னை தொடர்ந்தது. ஒரு ஏக்கருக்கு 25 மூட்டை வரை மக்காச்சோளம் மகசூல் கிடைத்து வந்த நிலையில் தண்ணீர் இன்றி போனதால், இம்முறை 15 மூட்டைகள் கூட கிடைக்கவில்லை என்று விவசாயிகள்

கவலையுடன் கூறுகின்றனர். அறுவடை செய்த கதிர்களை மூடியுள்ள சோலைகளை கூலியாட்களை கொண்டு அகற்றி அதன் பின் இயந்திரத்தில் போட்டு மக்காச்சோள மணிகளை தனியே பிரித்து எடுக்கின்றனர். இதனை உலர வைத்து பின்னர் மார்க்கெட் கமிட்டிக்கு விற்பனைக்கு எடுத்து செல்கின்றனர்.எதிர்பார்த்த மகசூல் இவ்வாண்டு கிடைக்காததால் மக்காச்சோளம் பயிரிட்ட விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர். இருப்பினும், தற்போது பெய்துள்ள மழை ஈரத்தை பயன்படுத்தி 1,000 ஏக்கரில் மானாவாரி நிலங்களில் மக்காச்சோளம் சாகுபடியில் விவசாயிகள் நம்பிக்கையுடன் ஈடுபட்டுள்ளனர்.

## முறை தவறி பெய்யும் பருவ மழை குறைந்து போன கொய்யா வரத்து

ஈரோடு: மழையின்மையால் குறைந்த அளவிலான கொய்யா பழங்களே, மார்க்கெட்டில் விற்பனைக்கு வந்துள்ளது. இவற்றின் விலை அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது. பழனி, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, ஈரோடு மார்க்கெட்டுக்கு ஆண்டுதோறும் ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் கொய்யா பழங்கள் விற்பனைக்கு வரும். இவை ருசி மிகுந்ததாக கருதப்படுகிறது. ஆனால் மாநிலத்தில் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாகவே, மழையற்ற வறண்ட வானிலை காணப்படுகிறது. தென் மேற்கு பருவ மழை சீஸன் நிறைவு பெறும் தருணமான தற்போது, திடீர் திடீரென மழை அவ்வப்போது பெய்து வருகிறது. முறையின்றி பெய்து வரும் மழையால் பூ மற்றும் சிறிய காய்கள் உதிர்ந்தும், காய் மற்றும் பழங்கள் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது ஈரோடு மார்க்கெட்டுக்கு குருவரெட்டியூர், தாளமலை போன்ற பகுதிகளில் இருந்து அதிகளவில் கொய்யா பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இவை கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 20 நாட்களில், இவற்றின் சீஸன் நிறைவு பெற்றுவிடும். அடுத்த, 10 நாட்களுக்கு பின்னர் பழனியில் இருந்து கொய்யா பழங்கள் விற்பனைக்கு வரும். சராசரியாக, ஈரோட்டில், ஐந்து டன் அளவுக்கு கொள்முதல் செய்யப்படுகிறது.ஆறு மாதங்கள் வரை சீசன் நீடிக்கும். ஆயுத பூஜை கால கட்டத்தில் விலை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.சதுர்த்தியை முன்னிட்டு ஏராளமான பொதுமக்கள், கொய்யா பழங்களை விரும்பி கேட்டு வாங்கி சென்றனர். இதுகுறித்து கொய்யா

பழங்கள் விற்பனை செய்யும் தினேஷ் கூறியதாவது: தாளமலையில் இருந்து கொய்யா பழங்கள் விற்பனைக்கு வருகிறது. கணிசமான அளவு வரத்து உள்ளது. அதிகபட்சமாக, 20 நாட்களுக்கு பழங்கள் விற்பனைக்கு வரும். அதன் பின், பழனியில் இருந்து அதிகளவில் கொய்யா வரும். இவை ருசி மிகுந்தது. வழக்கமாக ஆண்டுதோறும் இந்த கால கட்டத்தில், பழனியில் இருந்து கொய்யா பழங்கள் விற்பனைக்கு வந்து விடும். ஆனால் இந்தாண்டு பழனியில், தற்போது தான் சீசன் துவங்கி உள்ளது. அடுத்த, 10 நாட்களுக்குள் அதிகளவில் வரத்து இருக்கும். பருவ மழை முறைதவறி பெய்வதால், விளைச்சல் காலமும் மாறி உள்ளது. ஆயுத பூஜை காலங்களில் கொய்யா விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது, என்றார்.

### கர்நாடகாவில் கனமழை தக்காளி விலை உயர்வு

ஈரோடு: கர்நாடகாவில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கனமழையால், தக்காளி விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் கிலோ, 10ல் இருந்து, 20 ரூபாயாக விலை அதிகரித்துள்ளது. பெங்களூரு தக்காளி, ஹைபிரிட், 618 எனப்படும் நாட்டுத்தக்காளி உட்பட பல ரகங்கள் விற்பனைக்கு வருகிறது. தக்காளி விளைச்சலில் முக்கிய பகுதியான, ஈரோடு மாவட்டம் தாளவாடி, சத்தியமங்கலம் கோபி மற்றும் கர்நாடகாவில் தற்போது பரவலாகவும், கடும் மழை பெய்து வருவதால், விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தக்காளி வரத்து குறைந்துள்ளது.

15 கிலோ பெட்டியின் மொத்த விலை, 100ல் இருந்து, 200 ரூபாயாக அதிகரித்தது வியாபாரிகளின் வயிற்றில் புளியை கரைத்தது. சமையலுக்கு ருசியை அளிக்கும் தக்காளி விலை மார்க்கெட்டில், ஒரே நாளில் கிலோ, 10ல் இருந்து, 20 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதனால் வியாபாரம் மந்தமாக நடந்தது. நேற்று முன்தினம் ஈரோட்டுக்கு, 6,000 பெட்டியாக வரத்து இருந்தது. நேற்று, 1,500 பெட்டி மட்டுமே தக்காளி வரத்தானது. வரத்து குறைவால், விலை திடீரென்று பெட்டிக்கு, 100 ரூபாய் வரை அதிகரித்து, சில்லறை விலையும் இரட்டிப்பானது. கர்நாடக மாநிலத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதால், தக்காளி பறிப்பது குறைந்து, பூ,

காய்கள் உதிர்ந்து வரத்து குறைந்துள்ளது. மழை நின்றபின், விலை மீண்டும் குறைய வாய்ப்புள்ளது, என தக்காளி வியாபாரி பெரியசாமி தெரிவித்தார்.

## அதிக மகசூலுக்கு தொழில்நுட்பம் "சம்பா' விவசாயிகளுக்கு விளக்கம்

திருத்துறைப்பூண்டி: சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெற, தொழில்நுட்பம் குறித்து, கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மைய இயக்குனர் தெரிவித்துள்ளார். நடப்பாண்டு சம்பா சாகுபடியில் அதிக மகசூல் எடுக்கும், இயற்கை வேளாண்மை தொழில்நுட்பம் குறித்து ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண்மை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியுள்ளதாவது:

திருவாரூர், நாகை மாவட்டங்களில், சம்பா சாகுபடி நேரடி விதைப்பு செய்து விதை முளைக்க, சரியான நேரத்தில் மழை பெய்து, விதையும் முளைத்து அரை அடி உயரம் நெற்பயிர் வளர்ந்துள்ளது. தற்போது, ஆற்றில் வரும் தண்ணீரை சீராக வைத்து, தொழிலாளர்களை கொண்டு களை எடுப்பதன் மூலம், அதிக தூர்கட்டும். களை என்பது விவசாயிகளுக்கு தடை அல்ல. இதற்காக களைக்கொல்லியை பயன்படுத்துவது பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். களைக்கொல்லி இடும் நிலத்தில் மண்வளம் கெடும். மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் அழிந்து விடும். விவசாயிகள் நண்பன் என, அழைக்கப்படும் மண் புழு இனமும் அழியும். இதனால் சுற்றுச்சூழல் பாதித்து, பயிரின் வளர்ச்சியும் குறைந்து விடும். களைக்கொள்ளியை பயன்படுத்தி உற்பத்தியாகும் அரிசி விஷத்தன்மை உடையதாக இருக்கும். குறைந்த செலவில் அதிக மகசூலை, இயற்கை வேளாண்மை தொழில்நுட்பத்தில் பெற முடியும். ஒரு ஏக்கருக்கு, 50 அன்னக்கூடை அளவு தொழுஉரம், 20 லிட்டர் பஞ்ச காவ்யா, சூடோமோனாஸ் ஒரு லிட்டர், பாஸ்கா பாக்டீரியா, 10 பொட்டலம், அசோஸ் ஸ்பைரில்லம், 10 பொட்டலம் ஆகியவற்றை கலந்து, நிழற்பகுதியில், ஈர சாக்கு போட்டு மூடி வைத்து, 3 தினங்கள் கிளறி விட்டு, சீராக தண்ணீரை வயலில் பாய்ச்சி விட்டு, பயிர்களுக்கு தொழு உரத்தை தெளிக்க வேண்டும். இதனால் பயிர்

நன்கு வளர்ந்து, அதிக தூர்கட்டும். இதற்கு ரசாயன உரங்களும், பூச்சிக்கொல்லி மருந்து தேவையில்லை. ஒரு மாத பயிரியில் மூலிகை பூச்சி விரட்டியை பயன்படுத்த வேண்டும். அதற்கு ஆடு, மாடு தின்னாத இலை, ஒடித்தால் பால் வளர்க்கும் செடி உதாரணமாக, புங்கன், எருக்கன், ஊமத்தை, வேப்பிலை, நெய்வேலி காட்டாமணக்கு, காட்டாமணக்கு, பப்பாளி போன்ற செடிகளில் ஏதாவது, ஐந்து இலைகளை, மொத்தமாக 3 கி., எடுத்து, இடித்து, 10 லி., கோமியத்தில் போட்டு ஊற வைத்து, 15 தினங்களுக்கு பின் வடிகட்ட வேண்டும். இதை கைத்தெளிப்பான் மூலம், ஏக்கருக்கு, ஒரு டேங்குக்கு 10 லி., வீதம், 500 மி.லி., மூலிகை பூச்சி விரட்டியை கலந்து, 10 டேங்க் பயன்படுத்த வேண்டும். 75 சதவீதம் பூச்சி விரட்டப்பட்டு, 25 சதவீதம் பயிர் வளர்ச்சிக்கு பயன்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

### மத்திமீன் "சீஸன்' துவக்கம் நாகை மீனவர் குதூகலம்

வேதாரண்யம்: நாகை மாவட்டம், வேதாரண்யம் அடுத்துள்ள புஷ்பவனத்தில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இம்மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடி, சந்திரபாடி உள்பட மீனவ கிராமங்களில் இருந்து, இயந்திர படகுகளில், மீனவர்கள் மீன்பிடிக்க செல்கின்றனர். சீஸன் துவக்கத்தால், புஷ்பவனம் கடற்பகுதியில் அதிகளவில் மத்தி வகை மீன்கள் கிடைக்கிறது. இவ்வகை மீன்கள், அரசால் தடை செய்யப்பட்டுள்ள சுருக்குமடி வலையில் தான் அதிகளவில் பிடிபடும். கடலில், படகுகளிலேயே இரண்டு, மூன்று தினங்கள் தங்கி, மத்தி மீன்களை மீனவர்கள் பிடித்துக்கொண்டு, புஷ்பவனம் கடற்கரைக்கு வருகின்றனர். பெரிய படகுகளை கரைக்கு கொண்டு வருவதில், சிரமம் இருக்கும் என்பதால், ஒரு கி.மீ., தூரத்தில் இப்படகுகளை நிறுத்தி விட்டு, சிறிய பைபர் படகுகள் மூலம் மத்தி மீன்களை டன் கணக்கில், மீனவர்கள் கரைக்கு எடுத்து வருகின்றனர். ஒரு பெரிய படகில், 10 டன் வரை மீன்கள் சிக்கும். இவ்வகை மீன்களை, ஐஸ் பெட்டிகளில்

"பேக்கிங்' செய்து, வேன்களில் அண்டை மாநிலமான கேரளாவுக்கு மீனவர்கள், வியாபாரிகள் அனுப்பி வைக்கின்றனர். கேரளா மாநிலத்தினர், புஷ்பவனம் கடலில் கிடைக்கும் மத்தி மீனை விரும்பி வாங்கி சாப்பிடுகின்றனர். இதனால், ஒரு டன் மத்தி மீன், 20 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையாகிறது. பெரிய படகில், 10 டன் மீன்கள் பிடித்தால், இரண்டு லட்சம் ரூபாய் வரை மீனவர்களுக்கு வருமானம் கிடைக்கிறது. கடற்கரையில் உள்ள மீன்களை, 100 மீ., தூரத்தில் உள்ள வாகனங்களில் ஏற்றும் இடத்துக்கு, பிளாஸ்டிக் பெட்டிகளில் "தலைச்சுமையாக' எடுத்து வரும் பெண்களுக்கு, 300 ரூபாய் வரை கூலி தரப்படுகிறது. இப்பணியில் புஷ்பவனத்தைச் சேர்ந்த பெண்கள், 300 பேர் தினமும் மும்முரமாக ஈடுபடுகின்றனர். மத்தி மீன் சீஸன் ஆகஸ்ட் மாதம் இறுதியில் துவங்கி, செப்டம்பர் மாதம், 3வது வாரம் வரை இருக்கும். இந்த ஆண்டு தற்போது, சீஸன் துவங்கியுள்ளதால், வருவாய் அதிகம் கிடைப்பதாக, நாகை மாவட்ட மீனவர்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### விவசாயிகள் கவனத்திற்கு

நத்தம் : நத்தம் பகுதியில் மானாவாரி விவசாயத்திற்கேற்ற நல்ல மழை பெய்துள்ளதால், குறுகிய கால பயறு விதைகளான துவரை மற்றும் நெல் விதைகள் விவசாய விதை மையத்தில் மானியத்தில் விற்கப்படுகின்றன. இதனை பயன்படுத்தி பயன் பெறுமாறு விவசாய உதவி இயக்குனர் ரவிபாரதி கூறியுள்ளார்.

### நெல்பயிரில் திடீர் நோய் தாக்குதலால் தடுப்பு நடவடிக்கை தெரியாமல் விவசாயிகள் குழப்பம்

கம்பம் : தேனி மாவட்டத்தில், சாகுபடிசெய்யப்பட்டுள்ள முதல் போக நெல் பயிரில் திடீர் நோய் தாக்குதல் காணப்படுகிறது. என்ன நோய், என்ன மருந்து தெளிப்பது என தெரியாமல் விவசாயிகள் குழப்பத்தில் உள்ளனர். முல்லைப் பெரியாறு பாசனத்தில், கூடலூர் முதல் பழனிசெட்டிபட்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பருவ மழை, அணையின் நீர்

மட்டத்தை பொறுத்தே நெல் சாகுபடி நடைபெறும்.கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால், முதல் போக சாகுபடி கைவிடப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு பருவ மழையால், அணையின் நீர் மட்டம் உயர்ந்தது, விவசாயிகள் சந்தோஷமாக முதல் போக நெல் சாகுபடியை துவக்கினார்கள். இதில், கடந்த சில ஆண்டுகளாகவே வீரிய ஒட்டுரகங்களை பயன்படுத்துகின்றனர். கோவை விவசாய பல்கலை பரிந்துரை செய்யும், ஏடிடி 39, 36 போன்ற ரகங்களை கண்டுகொள்வதில்லை.விவசாயத்துறையினரும் விவசாயிகளை வற்புறுத்துவதில்லை. எனவே வீரிய ஒட்டுரக விதைகளை கூடுதல் விலை கொடுத்து வாங்கி சாகுபடி செய்கின்றனர். ஒரு வீரிய ஒட்டு ரகம் கம்பம் பகுதியில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடவு செய்து இரண்டு மாதங்களை நெருங்குகிறது.

இந்நிலையில் கம்பம் வீரப்பநாயக்கன்குளம், சின்னவாய்க்கால் உள்ளிட்ட சில பகுதிகளில் நெல் பயிரில் ஒருவித நோய் தாக்கியுள்ளது. பச்சை முழுவதும் மாறி, மஞ்சளாக வளர்ச்சி குன்றியுள்ளது. என்ன மருந்து தெளிப்பது, என்ன தடுப்பு நடவடிக்கை எடுப்பது எனத் தெரியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். விவசாயத்துறை அதிகாரிகள் கூறுகையில்,""இது மண் மற்றும் காற்றுமூலம் பரவும் ஒருவித பாக்டீரியாவால் ஏற்படுகிறது. இலையில் உள்ள பச்சையத்தை உறிஞ்சி எடுத்துவிடும். "டிகோடர்கமா' என்ற பூஞ்சான் மருந்தை விதையுடன் கலந்து நடவு செய்திருந்தால், இந்த நோய் தாக்காது. தற்போது ஒரு ஏக்கருக்கு "பெவிஸ்டின்' 150 கிராம் "ஸ்பிரே' செய்யலாம். இலை சுருட்டு புழு தென்பட்டால் மோனோகுரோட்டாபாஸ் 300 மில்லி ஒரு ஏக்கருக்கு அதிகபட்சமாக தெளித்து கட்டுப்படுத்தலாம்'' என்றார். சில பகுதிகளில் காணப்படும் இந்த நோய், தாக்குதல் தண்ணீர் மற்றும் காற்று மூலம் பிற பகுதிகளுக்கும் பரவும் முன்,விவசாயத்துறை அதிகாரிகள் தடுப்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும்.

### காளையார்கோயிலில் விவசாய பணி உரம் தட்டுப்பாடின்றி கிடைக்க கோரிக்கை

காளையார்கோவில் : காளையார்கோவில் ஒன்றியத்தில் கண்மாய் பாசனங்களை நம்பி 30 ஆயிரம் ஏக்கர் நெல் சாகுபடி நடந்து வருகிறது. தற்போது மழை பெய்து

வருவதையடுத்து, விவசாயிகள் நிலங்களை உழவடை செய்து வருகின்றனர். கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் கஷ்டப்பட்டு வரும் விவசாயிகளுக்கு வங்கிக்கடன் வழங்கவும், உரம் மற்றும் பூச்சிகொல்லி மருந்து தடையில்லாமல் கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாய சங்க செயலாளர் உடையார் கூறுகையில்,"கடந்த ஆண்டு நெல் சாகுபடி வறட்சி பாதிப்பால் விவசாயிகள் கஷ்டப்பட்டு வருகின்றனர். பிழைப்புக்கு வேறுவழியில்லாததால் நெல்சாகுபடியை தொடர்ந்து செய்து வருகின்றனர். நடப்பு ஆண்டு நெல்சாகுபடி பணியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு தாராளமாக வங்கிக்கடன் வழங்க வேண்டும். களை எடுப்பு பணி நடக்கும் போது உரம் அதிகம் தேவைப்படும். வசாயிகளுக்கு தொடக்கவேளாண்மை கூட்டுறவு கடன்சங்கங்களில் உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்து எளிதில் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்,என்றார். உதவி வேளாண்மை இயக்குநர் டேவிட் ஜெயசீலன் கூறுகையில் , அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கும் தேவையான அளவு உரம் வழங்கப்பட்டுள்ளது. உரம் தட்டுப்பாடு வராத அளவிற்கு குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது," என்றார்.

### உழவர் சந்தையில் காய்கறி விழா

வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், அருப்புக்கோட்டை உழவர் சந்தையில், காய்கறி திருவிழா நடந்தது. வேளாண் வணிக துணை இயக்குனர் முத்துமுனியாண்டி தலைமை வகித்தார். காய்கறி கருத்துக்காட்சியை, ராமநாதபுரம் விற்பனைக்குழு செயலர் முருகேசன் துவக்கிவைத்தார். விழாவில், வேளாண் உதவி இயக்குனர் மணிசேகரன், தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் பூவலிங்கம், பரமசிவம், ஹேமா, ஜெயலட்சுமி, வேளாண் அலுவலர்கள் சந்திரசேகரன், அய்யப்பன் கலந்து கொண்டனர். வேளாண் உதவி அலுவலகர் மகேஷ்பாபு நன்றி கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.09.2013**

**வெங்காயம் ஏற்றுமதி 81 சதவீதம் சரிந்தது**



இந்தியாவின் வெங்காயம் ஏற்றுமதி கடந்த ஆகஸ்ட் மாதத்தில் 81 சதவீதம் குறைந்து மொத்தம் 29,247 டன்னாக சரிந்தது. கடந்த 2 மாதங்களாக நாடு முழுவதும் வெங்காயம் வரத்து குறைந்ததால், விலை கடுமையாக உயர்ந்தது. சில்லரை விற்பனையில் கிலோ ரூ.90 வரை உயர்ந்தது. தற்போதும் நாடு முழுவதும் கிலோ ரூ.60,70 வரையில் விற்கப்படுகிறது. உள்நாட்டில் வெங்காயம் தாராளமாகக் கிடைப்பதை உறுதி செய்யும் விதத்தில், ஆகஸ்ட் 14ம் தேதி ஏற்றுமதியில் சில கட்டுப்பாடுகளை அரசு விதித்தது. ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயம் விலை ஒரு டன்னுக்கு குறைந்தபட்சம் 650 டாலராக நிர்ணயம் செய்தது. இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி கடந்த ஆண்டைவிட 81 சதவீதம் குறைந்து மொத்தம் 29,247 டன்னாக சரிந்தது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் மொத்தம் 1,56,283 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

ரூபாய் மதிப்பில், கடந்த ஆண்டில் மொத்தம் ரூ.164.92 கோடி ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மொத்தம் ரூ.125.46 கோடியாகக் குறைந்துவிட்டது.

இந்த நிதியாண்டில் ஏப்ரல்,ஆகஸ்ட் மாதங்களில் வெங்காயம் ஏற்றமதி 6,97,028 டன்னாகக் குறைந்தது. கடந்த நிதியாண்டின் இதே மாதங்களில் ஏற்றுமதி மொத்தம் 8,50,634 டன்னாக இருந்தது. இருப்பினும், ரூபாய் மதிப்பில் கடந்த ஆண்டு ரூ.844 கோடியாக இருந்தது இந்த நிதியாண்டில் ரூ.1,341 கோடியாக அதிகரித்துள்ளது.

எதிர்வரும் வாரங்களில் வெங்காயம் விளைச்சல், வரத்தைப் பொருத்து ஏற்றுமதி இருக்கும் என்று வியாபாரிகளும் ஏற்றுமதியாளர்களும் தெரிவித்தனர். மார்ச் முதல் ஜூன் வரையிலான ராபி சீசனில்தான் 60 சதவீதம் வெங்காயம் விளைச்சல் உள்ளது. ஜூலை முதல் அக்டோபர் வரையிலான காலத்தில் வெங்காயம் விளைச்சல் குறைவாக இருக்கும். இதனால் தான் தட்டுப்பாடு நிலவி, விலை அதிகரிக்கிறது. அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான காரீப் சீசனிலும் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காரீப் சீசனின் பிற்பகுதியில் ஓரளவு வெங்காயம் விளைச்சல் இருக்கும்.

உலகில் அதிக அளவில் வெங்காயம் உற்பத்தி செய்யும் நாடுகளில் சீனாவுக்கு அடுத்த இடத்தில் இந்தியா உள்ளது. கடந்த ஆண்டு மொத்தம் 166 லட்சம் டன் வெங்காயம் உற்பத்தி செய்யப்பட்டது. கடந்த 2012,13 நிதியாண்டில் மொத்தம்

18.22 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதி செய்ததன் மூலம் ரூ.2,294 கோடி வருமானம் ஈட்டியுள்ளது.

**காட்டுமன்னார்கோவில் பகுதியில் நேரடி நெல் விதைப்பு வயல்களில் களை நீக்கும் பயிற்சி முகாம்**

காட்டுமன்னார்கோவில் பகுதியில் நேரடி நெல் விதைப்பு மூலம் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இதில் களை பிரச் னையை போக்குவதற்காக வேளாண்மை துறை சார் பில் களை கட்டுப்படுத்தும் முகாம் வீராணந்தபுரத்தில் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் கனகசபை தலைமை தாங்கினார். களை கட்டுப்படுத்துவது பற்றி செயல் விளக்கம் காண்பிக்கப்பட்டது. இதில், களைகள் முளைக்கும் முன் பிரிடியாலாக்கிளோ ஏக்கருக்கு 450 மி.லி மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து விதைத்த 3 அல்லது 5ம் நாள் வரை போதிய ஈரப்பதம் மண்ணில் இருக்கும்போது தெளித்து கட்டுப்படுத்துவது பற்றி கூறப்பட் டது. களைகள் முளைத்த பின் பிஸ்பைரிபாக் சோடி யம் 10 என்ற மருந்தை ஏக்கருக்கு 80லிருந்து 100 மி.லிட்டர் மருந்து வரை பயன்படுத்தி 200 லிட்டர் தண்ணீரில் கலந்து நேரடி நெல் விதைப்பு செய்த 15 அல்லது 20 நாட்கள் உள்ள வயல்களில் தெளித்து கட்டுப்படுத்தும் முறை செய்து காண்பிக்கப்பட்டது. வரும் 15ம் தேதி வரை ராஜேந்திரசோழகன், முட்டம், செட்டிதாங்கல், வேளம் பூண்டி, திருமூலஸ்தானம், மற்றும் குச்சூர் கிராமங்களில் நடைபெறுகிறது. பயிற்சி முகாமில் அட்மா கதிர்காமன், வேளாண்மை உதவி அலுவலர்கள் திருமுருகன், பாரதிதாசன், அருள், குணச்சந்திரன், மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**செஞ்சியில் தொடர் மழை நடவு பணிகளில் விவசாயிகள் தீவிரம்**

செஞ்சி மற்றும் சுற்று பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் ஏரிகளுக்கு தண்ணீர் வரத்து தொடங்கி உள்ளது. கடந்த சில மாதங்களாக கடும் வறட்சியில்

இருந்த செஞ்சி பகுதியில் தற்போது தினமும் மாலை நேரங்களில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது.

இதனால் ஆறு, ஓடைகளுக்கு தண்ணீர் வர தொடங்கி உள்ளது. சம்பா பயிர் செய்ய நாற்று விடப்பட்ட நிலங்களுக்கு நடவு செய்ய போதுமான மழை பெய்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து சம்பா நடவு செய்ய தொடங்கி உள்ளனர்.

மழை தொடர்ந்து பெய்து வருவதால் குறுகிய கால பயிர்களை நாற்று விடாமல் பொன்னி, பிபிடி ஆகிய நெல் ரகங்களை பயிர் செய்யும் பணியில் விவசாயிகள் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## 100 சதவீத மானியத்தில் பண்ணைக்குட்டை அமைக்க விவசாயிகளுக்கு உதவி வேளாண் துறை தகவல்

விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் முற்றிலும் இலவசமாக 100 சதவீத மானியத்தில் பண்ணை குட்டைகள் அமைக்க அணு கலாம் என காடையாம்பட்டி வட்டார வேளா ண்மை அலுவலக உதவி இயக்குநர் நாசர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: நீர் ஆதாரம் குறை ந்து வரும் இந்நேரத்தில் நீர் ஆதாரத்தை பெருக்கவும் நிலத்தடி நீர்மட்டத்தை மேலும் குறையாமல் பாதுகாக்கவும் வேளாண் துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நீர் ஆதாரத்தை பெரு க்கி அதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரித்து உழ வர் பெருமக்களின் வருவாயை பெருக்கும் உயர்ந்த நோக்கில் தமிழகம் முழுவதும் பண்ணை குட் டைகள் 100 சதவீத மானியத்துடன் முற்றிலும் இலவசமாக அமைத்து தரப்படுகின்றது. பண்ணை குட்டைகளை அமைப்பதின் மூலம் மழை நீரை வீணாக்காமல் அறு வடை செய்து, நிலத்தில் சேமிக்கவும், அந்த உபரிநீரை கொண்டு அதிகம் விவசாயம் செய்யவும் பண்ணைக்குட்டைகள் வழிவகுக்கின்றன. விவசாயிகளின்

வருமானத்தை பெருக்கும் வகையில் பண் ணை குட்டைகளில் மீன்கள் வளர்த்து லாபமடையவும் வாய்ப்புள்ளது. தங்களது நிலத்தில் பண்ணை குட்டை கள் அமைக்க விரும்பும் விவசாயிகள் காடையாம்பட்டி வட்டார வேளாண் அலுவலகத்தை அணுகலாம். தங்களது நிலத்தின் கணிப்பொறி பட் டா ஒளி நகலை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.
இந்த விண்ணப்பங்கள் வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் வாயிலாக கலெக்டரிடம் ஒப்புதல் பெறப்படும். இதையடுத்து வட்டார வளர் ச்சி அலுவலர் மூலம் தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் பண்ணைக்குட் டை அமைக்கும் பணி முற்றி லும் இலவசமாக மேற்கொள்ளப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**தொடர் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி கிருஷ்ணகிரி அணை நீர் மட்டம் 5 நாட்களில் 6 அடி உயர்வு தளியில் 80 மி.மீ., மழை பதிவு**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர் மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி அணை நீர்மட்டம் 5 நாளில் 6 அடி உயர்ந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை 6வது நாளாக தொடர்ந்து பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாய பயிர்கள், தென்னை, மா, புளி உள்ளிட்ட மரங்கள் செழிப்பாக உள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை 8 மணி நிலவரப்படி அதிகபட்சமாக தளியில் 80 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. இதே போல் கிருஷ்ணகிரி & 45.20 மி.மீ., ஓசூர் & 31 மி.மீ., ராயக்கோட்டை & 23 மி.மீ., பெனுகொண்டாபுரம் & 22.40 மி.மீ., அஞ்செட்டி & 13 மி.மீ., பாரூர் & 12 மி.மீ., தேன்கனிக்கோட்டை & 12 மி.மீ., நெடுங்கல் & 10.20 மி.மீ., சூளகிரி & 8 மி.மீ., போச்சம்பள்ளி & 6.20 மி.மீ., ஊத்தங்கரை & 6 மி.மீ., என மழை பதிவாகியுள்ளது.

இந்நிலையில் நேற்று மாலை நிலவரப்படி கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து 712

கன அடியாக உள்ளது. அணையின் நீர்மட்டம் கடந்த 4ம் தேதி 38.40 அடியாக இருந்தது. 5 நாளில் சுமார் 6 அடி உயர்ந்து தற்போது 44.30 அடியாக உள்ளது. எனவே தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்தால் அணையின் மொத்த உயரமான 52 அடியை இன்னும் ஒரு சில தினங்களில் எட்டிவிடும். மேலும் பரவலாக அனைத்து பகுதிகளிலும் மழை பெய்து வருவதால் அணையில் இருந்து பாசனத்திற்கு திறந்துவிடப்படும் தண்ணீரின் அளவு பாதியாக குறைக்கப்பட்டு தற்போது 74 கன அடி தண்ணீர் மட்டுமே திறந்துவிடப்படுகிறது என பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் குமார் தெரிவித்தார். ஓசூர்: ஓசூரில் நேற்று முன்தினம் மாலை முதல் லேசாக மழை பெய்யத் தொடங்கியது. இரவில் மழை விடாமல் பெய்தது. நேற்று காலை வரை மழை விடாமல் பெய்து கொண்டே இருந்தது. நேற்று காலை நிலவரப்படி ஓசூரில் 31 மில்லி மீட்டர் மழை பெய்தது. அருகில் உள்ள சூளகிரியில் 8 மில்லி மீட்டர் மழை பெய்தது. ஓசூரில் நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் சாலைகள் வெள்ளக்காடானது. ஓசூர் ரெயில் நிலைய சாலை, தேன்கனிக்கோட்டை சாலை, பாகலூர் சாலை என பல இடங்களில், சாலைகள் வெள்ளக்காடானது. சில கடைகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதில் பொருட்கள் நாசம் ஆனது.

**தோட்டக்கலைத்துறை சார்பில் ரோஜா சாகுபடி விவசாயிகளுக்கு குளிர்பதன கிடங்கு அமைக்க மானியம்**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் குளிர்பதன கிடங்கு அமைக்க மானியம் வழங்கப்பட உள்ளதாக தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலர் பயிர்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படுகிறது. மலர்களில் ரோஜா முக்கிய இடத்தை பெறுகிறது. சுமார் 150 ஏக்கர் பரப்பளவில் பசுமை குடில் அமைக்கப்பட்டு சூளகிரி, ஓசூர், கெலமங்கலம் மற்றும் தளி

வட்டாரங்களில் ரோஜா மலர் சாகுபடி செய்யப்படுகிறது.

ரோஜா மலர்களை பறித்தவுடன் விற்பனை செய்யாமல் குளிர்பதன கிடங்கில் 15 நாட்கள் வரை வைத்திருந்து நல்ல விலைக்கு விற்க இயலும். குளிர்பதன கிடங்கில் ரோஜாவை வைத்து விற்பதால் பூவின் தரமும், பூவின் பருமனும் நன்றாக இருப்பதோடு அதிக விலைக்கு விற்பனையாகும். இதனை ஊக்குவிக்க தோட்டக்கலைத்துறை மூலம் குளிர்பதன கிடங்கு அமைப்பதற்காக அதிகபட்சமாக 40 சதவிகித மானியம் ஸி6 லட்சம் வழங்கப்படவுள்ளது.

திட்ட வடிவில் வங்கி மூலம் கடன் பெற்று இம்மானியத்தை ரோஜா சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் அனைவரும் பெற்றுக்கொள்ளலாம். மேலும், இதுதொடர்பான விவரங்களுக்கு அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம்.

கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் திறக்கும் தண்ணீர் 4,000 கன அடியாக குறைப்பு டெல்டா மாவட்டங்களில் தொடர் மழை எதிரொலி

காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழையை தொடர்ந்து கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் திறந்து விடும் தண்ணீரின் அளவு 4,000 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது. காவிரி டெல்டா மாவட்டங்களான திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மாவட்டங்களில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் நல்ல வெயில் அடித்து வரும் நிலையில் இரவு நேரங்களில் விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. நேற்று காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு விவரம் மி.மீட்டரில் வருமாறு:

கல்லணை 9.8, திருக்காட்டுப்பள்ளி 12.6, தஞ்சை 8.6, திருவையாறு 2, பாபநாசம் 15, பேராவூரணி 4.2, ஆயங்குடி 2, நெய்வாசல் தென்பாதி 7.2, பூதலூர் 13.8,

வெட்டிக்காடு 46.4, ஈச்சங்கோட்டை 24, மதுக்கூர் 39, கோரையாறு 29.2, பாண்டவையாறு 2.6, முல்லையாறு 49.2.

இம்மழையால் டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடிக்கான பணிகள் விறுவிறுப்படைந்துள்ளன. உழவு பணிகளும், விதைக் கும் பணிகளும் முழுவீச்சில் நடந்து வருகிறது. செப்டம்பர் மாதம் இறுதிக்குள் நாற்றுவிடும் பணிகள் முடிக்கப்பட்டால் தான் பருவமழையிலிருந்து பயிர்களை காக்க முடியும் என்பதால் விவசாயிகள் சாகுபடி பணி களை தீவிரப்படுத்தியுள்ள னர். இந்நிலையில் மேட்டூர் அணையில் இருந்து பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீர் அளவு வினாடிக்கு 4 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட்டது.

மேலும் கல்லணையிலிருந்து காவிரி, வெண்ணாற்றில் திறந்து விடப்படும் தண்ணீரின் அளவும் வினாடிக்கு 4 ஆயிரம் கன அடியாக குறைக்கப்பட் டது. அதேசமயம் கல்லணை கால்வாயில் வினாடிக்கு 3 ஆயிரம் கன அடியும், கொள்ளிடத்தில் 1000 கன அடியும் தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது.

## சம்பா விதை நாற்றங்காலில் இலைப்பேன் பூச்சி தாக்குதல் விவசாயிகளுக்கு யோசனை

சம்பா நடவு விதை நாற்றங்காலில் இலைப்பேன் பூச்சியை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டம் மயிலாடுதுறை சுற்றுவட்டார பகுதிகளில் நிலத்தடி நீரை கொண்டு 16,835 ஏக்கரில் குறுவை சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது 50 சதவீத அளவிற்கு அறு வடை நடந்துள்ளது.

இன் னும் ஒரு சில வாரங்களில் அனைத்தும் அறுவடை செய்யப்பட்டு விடும். 16,915 ஏக்கரில் சம்பா சாகுபடிக்காக விதை நாற்று விடும் பணி துவங்கப்பட்டுள்ளது. விதைநாற்று சுமார் 750 ஏக் கரில் நடந்துள்ளது. இந்தாண்டு தாளடி மற்றும் சம்பா விவசாயம் 33,750 ஏக்கரில் மேற்கொள்ளப்பட உள்ளது. இதுகுறித்து மயிலாடுதுறை வேளாண்மை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறுகையில், தற்போது சம்பா விவசாயத்திற்கான விதைநாற்று பணிகள்

நடந்துள்ளது.

750 ஏக்கரில் ஆடுதுறை 48, பிபிடி என்ற வகை நெல் விதை விடப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவை யான விதைநெல் மற்றும் யூரியா, டிஏபி மற்றும் கலப்புரங்கள் என அனைத்தும் தேவையான அளவில் உள்ளது. வேளாண் விரிவாக்க மையம், தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி, தனியார் நிறுவனங்களில் 5 சதவீத மானியத்தில் விதைகள் கிடைக்கும். விதை கிராம திட்டத்தில் 10 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகிறது. தற்போது விதைநாற்றங்காலில் 35 முதல் 40 நாட்களில் நாற்றுகள் நடவுக்கு தயாராகும். இந்த நேரத்தில் இலைப்பேன், படைப்புழுக்கள், நூற்புழுக்கள் என்ற மூன்று விதமான பூச்சிகள் தாக்குவதற்கான வாய்ப்புள்ளது. இலைப்பேன் பூச்சியானது நாற்றின் நுனியை வெள்ளை நிறமாக்கிவிடும். அதை கட்டுப்படுத்த ஊடுருவி பாயக்கூடிய பூச்சிமருந்தை தெளிக்க வேண்டும். புரோபோனபாஸ் என்ற மருந்தை 1 லிட்டருக்கு 2 மி.லி. வீதம் கலந்து ஏக்கருக்கு 200 லிட்டர் தெளிக்க வேண்டும்.

படைப்புழுக்களின் தாக்கம் என்பது இரவு நேரத்தில் கால்நடைகள் நாற்றுகளை மேய்ந்துவிட்டதைப்போல் காணப்படும். இதை கட்டுப்படுத்த நாற்றங்காலில் நாற்றுகள் மூழ்கும் வகையில் தண்ணீரை தேக்கி அரை மணி நேரத்தில் வடிகட்டலாம்.

மேலும் இந்த புழுக்களை ஒழிக்க குயினோபோஸ் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி என்ற விகிதத்தில் ஏக்கருக்கு 200 லிட்டர் தெளிக்க வேண்டும். நூற்புழுக்கள் என்பது நிலத்திலேயே உள்ளவை. இது நாற்றின் நுனியை தாக்கி அவற்றை வளைத்துவிடும். இதுபோல் காணப்பட்டால் ஏக்கருக்கு அரை லிட்டர் வேப்பெண்ணெயை தண்ணீரில் கரைத்து தெளிக்க வேண்டும் அல்லது 60 கிலோ வேப்பம்புண்ணாக்கை ஒரு ஏக்கரில் இட வேண்டும்.

இலைப்பேன் பூச்சி யானது விதைவிட்ட 15 நாளி லிருந்து 20 நாட்களுக்குள்

ஏற்படும், படைப்புழு 20 நாளிலிருந்து 25 நாட்களுக் குள் ஏற்பட்டு தாக்கலாம், நூற்புழு விதை நெல் விதைத்த ஒரு வாரத்திற்குள் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது என்றார்.

இதுபோன்ற நோய்களிலிருந்து தவிர்க்க விதை விதைப்பு காலத்தில் நிலத் தை தயார் படுத்தும்போதே ஒரு ஏக்கர் நிலத்தில் 200 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டால் இந்த 3 வித நோய்களையும் தவிக்கலாம் என்றார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**10.09.2013**

**மத்திய அரசின் கட்டுப்பாடுகளால், ஆகஸ்டில் வெங்காயம் ஏற்றுமதி 81 சதவீதம் வீழ்ச்சி**



மத்திய அரசின் கட்டுப்பாடுகளால், ஆகஸ்டு மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 81 சதவீதம் வீழ்ச்சி அடைந்து 29,247 டன்னாக குறைந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 1.56 லட்சம் டன்னாக இருந்தது.

**விலை உயர்வு**

உள்நாட்டில் வெங்காய வரத்து குறைந்ததால் 1 கிலோ வெங்காயம் ரூ.80 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனையடுத்து மத்திய அரசு, உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையிலும் வெங்காய ஏற்றுமதிக்கு கட்டுப்பாடுகளை விதித்தது. ஆகஸ்டு மாதம் 14–ந்தேதி ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை 1 டன்னுக்கு 650 டாலராக நிர்ணயம் செய்தது. இதன் பலனாக ஆகஸ்டு மாதத்தில் ஏற்றுமதி

குறைந்துள்ளது. ஒரு கிலோ வெங்காயம் விலை சுமார் ரூ.50–ஆக உள்ளது. மேலும் வெங்காயம் ஏற்றுமதி மதிப்பு அடிப்படையில் ரூ.164.92 கோடியிலிருந்து ரூ.125.46 கோடியாக சரிவடைந்துள்ளது.

நடப்பு ஆண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 8.51 லட்சம் டன்னிலிருந்து 6.97 லட்சம் டன்னாக சரிவடைந்துள்ளது. அதே போல் மதிப்பு அடிப்படையில் ரூ.844 கோடியிலிருந்து ரூ.1,341 கோடியாக உயர்ந்துள்ளது.

சர்வதேச அளவில் வெங்காயம் உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்து இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. 2012–13–ஆம் நிதி ஆண்டில் வெங்காயம் ஏற்றுமதி அளவின் அடிப்படையில் 18.22 லட்சம் டன்னாகவும் மதிப்பு அடிப்படையில் ரூ.2,294 கோடியாகவும் இருந்தது.

**செல்போன் பயன்பாட்டில் கிராமங்களின் பங்களிப்பு 54 சதவீதமாக உயர்வு**



நாட்டில் செல்போன் வாடிக்கையாளர் மொத்த எண்ணிக்கையில் கிராமப்புறங்களின் பங்களிப்பு 54 சதவீதமாக உயர்ந்துள்ளது. தற்போது கிராமப்புறங்களில் 29.80 கோடி பேர் செல்போன்களை வைத்துள்ளனர். ஆராய்ச்சி நிறுவனமான ஜக்ஸ்ட் மேற்கொண்ட ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

நாட்டில் செல்போன் வாடிக்கையாளரின் மொத்த எண்ணிக்கை 55.48 கோடியாக உள்ளது. இதில் நகரங்கள் மற்றும் சிறிய நகரங்களில் செல்போன்

பயன்படுத்துவோர் எண்ணிக்கை 25.60 கோடியாகும். நாட்டில் தற்போது 77.39 கோடி செல்போன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 64.34 கோடி இணைப்புகள் பயன்பாட்டில் உள்ளன. இது மொத்த செல்போன் வாடிக்கையாளர் எண்ணிக்கையை விட அதிகமாகும். ஏனென்றால் சில வாடிக்கையாளர் ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புகளை பெற்றுள்ளனர்.

நாட்டில் இணையதள பயன்படுத்துவோர் எண்ணிக்கை 14.32 கோடியாக உள்ளது. கணிணி அல்லது மொபைல் போன் வாயிலாக இணையதளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை 9.47 கோடியாக உள்ளது. ஏர்டெல் லைவ், ரிலையன்ஸ் ஆர் வேர்ல்டு போன்ற தொலைத்தொடர்பு நிறுவனங்கள் வழங்கும் சேவைகளை பயன்படுத்தி இணையதளம் உபயோகிப்போர் எண்ணிக்கை 14.32 கோடியாக அதிகரித்துள்ளது.

**தென்னையில் அதிக விளைச்சல் பெற உயிர் உரங்களை இடுங்கள் வேளாண்மை உதவி இயக்குனர் வேண்டுகோள்**



தென்னையில் அதிக விளைச்சல் பெய உயிர் உரங்களை இடுமாறு விவசாயிகளை, வேளாண்மை உதவி இயக்குனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து உடுமலை வேளாண்மை உதவி இயக்குனர் மா.மகாலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

**<u>இயற்கை வேளாண்மை</u>**

இயற்கை வழி வேளாண்மை என்பது நம் முன்னோர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்த விதி முறையாகும். வேகமான மக்கள் தொகை பெருக்கத்தால் வேளாண்மைத் தொழில் நுட்பத்தில் மாறுபட்ட அணுகு முறையை மேற்கொண்டு விரைந்து உற்பத்தியை பெருக்க வழிவகுத்தன் காரணமாக இன்று உணவு உற்பத்தியில் நாம் தன்னிறவை அடைந்து விட்டாலும் அதிகப்படியான ரசாயன உரங்கள், பூங்சாணம் மற்றும் பூச்சிக்கொல்லிகள் மற்றும் களைக்கொல்லிகளை உபயோகதித்தன் காரணமாக மண்வளம், நீர்வளம் மற்றும் காற்று மண்டலம் மாசுபட்டு மனிதன், கால்நடைகள், பறவைகள் மற்றும் இர உயிரினங்களின் உடல் நலம் பாதிப்பு அடைந்து வருகின்றனர்.

இத்தருணத்தில் சுற்றுச்சூழலோடு ஒன்றிய இயற்கை வேளாண்மையே, சிறந்த மாற்று வழியாக உருவெடுத்துள்ளது. இத்தகைய வேளாண்மை மண்ணின் வளத்தைத் காத்து சுற்றுச்சூழலின் தூய்மைக்காத்து அதன் சமநிலையினை நிலைப்படுத்த உதவுகிறது. உழவர்கள் தங்களது விளை நிலங்களிலேயே இடு பொருட்களை விளைவித்து இடுவதே இயற்கை வேளாண்மையாகும்.

**<u>தென்னை விவசாயம்</u>**

உடுமலை வட்டாரத்தில் சுமார் 14,500 ஹெக்டர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டு முதன்மையான நிலைப்பயிராக விளங்குகிறது. தென்னை விவசாயிகள் பெரும் பாலும் ரசாயன உரங்களையும் பூச்சி மற்றும் பூங்சாணக் கொல்லிகளையும், களைக்கொல்லிக ளையும் பயன்படுத்துவதால் அவற்றில் எஞ்சியுள்ள நச்சுத்தன்மை தேங்காய்களிலும், இளநீரிலும் உள்ளது என விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டுள்ளது.

நஞ்சில்லாத உணவே உடலுக்கு நலம் பயக்கும் என்பதால் தென்னைக்கு ஊட்டச்சத்துகளை அளித்திட மக்கிய தொழு உரம், கம்போஸ்டு, மண்புழு உரம், உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள், பசுந்தழை உரங்களை பரிந்துரைப்படி இட வேண்டும். தென்னை மரங்களுக்கு தழைச்சத்தினை அளித்திட அஸோஸ்பைரில்லம் உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு 200 கிராம் என்ற அளவில் மக்கிய தொழு உரத்துடன் கலந்து இடுவதால் அதில் உள்ள பாக்டீரியங்கள் காற்று மண்டலத்தில் உள்ள தழைச்சத்தினை (நைட்ரஜன்) கிரகித்து மண்ணில் நிலைநிறுத்தி பயிரின் வேர்களுக்கு அளிக்கிறது. இதனால் பயிர் செழித்து வளர்ந்து அதிக காய்ப்புத்திறனை பெருகிறது.

**உயிர் உரங்கள்**

இதே போன்று பாஸ்போபேக்டீரியா உயிர் உரத்தினை ஒரு மரத்திற்கு 200 கிராம் என்ற அளவில் மக்கிய தொழுஉரத்துடன் கலந்து இடுவதால் மண்ணில் உள்ள கரையாத மனிச்சத்தினை (பாஸ்பரஸ் சத்து) அங்கக அமிலங்கள் மூலமாக கரைத்து பயிருக்கு கிட்டும் நிலைக்கு மாற்றித்தருகிறது. இதன் வாயிலாக பயிருக்கு போதிய மணிச்சத்து கிடைத்து தேங்காய் அளவு, கொப்பரையின் அளவு அதிகரித்து அதிக விளைச்சல் கிடைக்கிறது.

மேற்குறிப்பிட்ட அஸோஸ்பைரில்லம், பாஸ்போபேக்டீரியா உயிர்உரங்கள் 200 கிராம் பாக்கெட் ஒன்றுக்கு ரூ.6 என்ற சலுகை விலையில் உடுமலை, குறிச்சிக்கோட்டை வேளாண்மை விரிவாக்க மையங்களில் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இயற்கை வேளாண்மையினை மேற்கொள்ள மேற்கண்ட உயிர், உரங்களை தென்னை விவசாயிகள் பயன்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.